# ஹிஜ்ரத்

## ஓர் உன்னத சமூகத்தை இலக்காகக் கொண்ட பயணம்

எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A.)

அங்கம் - 03

## மதீனா சாசனம்

**முக்கியத்துவம்**

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ர் சென்று, அங்கு ஒரு சிறந்த, முன்மாதிரியான சமூக அமைப்பை தோற்றுவிக்க முனைந்தார்கள். எனவே, மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்களுடனும் யூத - கிருஸ்தவ சமூகங்களுடனும், பிற சமயங்களைப் பின்பற்றியவர்களுடனும் அரசியல் உடன்படிக்கை ஒன்றைச் செய்தார்கள். இவ்வாறு அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கையே மதீனா சாசனம் அல்லது, பிரகடனம் அல்லது, ஆவணம் என அழைக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் உருவாக்கிய ஒப்பந்தம், ஒப்பந்தம் என்பதற்கும் மேலானதாகும்.

மதீனாவின் பல்வேறு குழுவினரை நபி (ஸல்) அவர்கள் இந்த யாப்பின் மூலம் ஒன்றுபடுத்தினார்கள். இந்த ஒப்பந்தத்தின் பழைய மூலாதாரங்களின்படி இது ‘அல் கிதாப்’ (நூல்) எனவும் ‘அல் ஸஷீபா’ (கடதாசி நூல்) என்றும் கூறப்படுகிறது. நவீன ஆய்வுகள் ‘அல் துஸ்தூர்’ (அரசியல் யாப்பு) அல்லது ‘வதீக்கா’ (ஆவணம்) என்றும். கூறுகின்றன. (பார்க்க, Akram Diya al Umar, 1991:99)

அன்று, ஏன் இத்தகையதொரு அரசியல் சாசனம் தேவைப்பட்டது? சமயம், இனம், வர்க்கம், நிலையாக வாழ்வோர், அகதிகள் என்று பல அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் குழுவினரை இவ்வொப்பந்தத்தின் மூலம் நபி (ஸல்) அவர்கள் ஒன்று படுத்தினார்கள். எனினும், இவ்வொப்பந்தம் பற்றி முஸ்லிம் உலகிலோ மேற்கத்திய உலகிலோ போதிய அளவு கருத்துப் பரிமாறல்களோ ஆய்வுகளோ நடைபெறவில்லை என்று விமர்சிக்கப்படுகிறது.

மதீனா ஒப்பந்தத்தின் வடிவத்தையும், கட்டமைப்பையும், சொற்பொருளியல் மரபுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ள R.B. SERJEANT இது பற்றிய கருத்தை பின்வருமாறு கூறுகிறார்:

வரலாற்றாசிரியர்கள், அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், மேற்கத்திய, கீழத்தேயவியலாளர்களாயிருந்தாலும் மதீனா அரசியல் யாப்புப் பற்றி மிகக் குறைந்த அளவு கவனமே செலுத்தியுள்ளனர். இது உண்மையிலேயே ஆச்சரியத்திற்குரியதாகும். இஸ்லாத்தின் ஆரம்பத் தோற்றத்தைப் பொறுத்தவரை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இவ்வுடன்படிக்கை அதிக ஆவலைத் தரத்தக்கதும், முக்கியத்துவமிக்கதுமாகும். மேலும் ஐயத்திற்கிடமற்ற வகையில் உண்மையான யாப்புமாகும்”.

(R.B. Serjeant, 1981 V-2)

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்ட போது, அங்கு அகபா உறுதி மொழிகளின் பின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மதீனா முஸ்லிம்களும், மக்கத்து முஸ்லிம்களும் இவர்கள் அல்லாத யூத - கிறிஸ்தவர்களும், ஏனைய விக்கிரக வணக்கஸ்தர்களும் நெருப்பு வணங்கிகளும் காணப்பட்டனர்.

இவ்வாறு பல்வேறு பிரிவுகளாக காணப்பட்ட மக்களுக்கு மத்தியில் ஓர் அரசை நிறுவுவதாயின் அம்மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் நிலையிலான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது அத்தியாவசியத் தேவையாக இருந்தது.

நாம் இன்று நடைமுறையில் பார்க்கின்றபோது பெரும்பான்மையாக வாழுகின்ற சமூகம் சிறுபான்மையினரின் உரிமைகளை, அபிலாஷைகளை அனுசரிக்காமல் நடப்பதால் பல பாரிய பிரச்சினைகள் எழுந்து அது விஸ்வரூபமெடுத்து இறுதியில் அது ஆயுதப் போராட்டமாக உருமாறி அழிவையும் நாசத்தையும் உண்டு பண்ணுவதை அவதானிக்கின்றோம். அதே போன்று அன்று முஸ்லிம் அல்லாதவர்களின் விருப்பு வெறுப்புகளை அனுசரிக்காமல் அரசொன்றை நிறுவுவது நடைமுறையில் பல சிக்கல்களை ஏற்படுத்தும் எனக்

கருதிய நபி (ஸல்) அவர்கள், இவர்கள் அனைவரையும் சாசனம் ஒன்றின் கீழ் ஒத்துழைக்க வைக்கும் பொருட்டு இச்சாசனத்தை உருவாக்கினார்கள் எனப் பொதுவாகக் கருதலாம்.

மதீனா சாசனம் ஏற்படுவதற்குக் காரணமாய் அமைந்த மற்றுமொரு முக்கிய காரணம்; பல எதிர்ப்புகளுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் உடைமைகள் அனைத்தையும் இழந்து, மக்காவிலிருந்து வெளியேறிய முஹாஜிர்களை குறைஷியர்கள் மீண்டும் தாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தன. அவ்வாறு அவர்கள் மதீனாவிற்கும் வந்து முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்த முனைந்தால், அவர்களை விட்டு வைக்க முடியாது. எனவே, அவர்களை எதிர்கொள்வதற்கு மாபெரும் சக்தி ஒன்றை நபி (ஸல்) அவர்கள் திரட்ட வேண்டியிருந்தது.

அத்தகையதொரு மகத்தான சக்தியைத் திரட்டுவதற்கும் மீண்டும் முஸ்லிம்கள் குறைஷியர்களின் அடக்கு முறையிலிருந்து விடுபடுவதற்கும் இப்படியானதொரு எழுத்து மூலமான ஒப்பந்தம் அல்லது, சாசனம் இன்றியமையாத தேவையாகக் காணப்பட்டது.

இவைகள்தவிர, நபி (ஸல்) அவர்களையும் முஹாஜிர்களையும் வரவேற்ற மதீனாவில் வாழ்ந்த பலரும் பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே வரவேற்றனர்.

யூதர்கள் முஸ்லிம்களின் பலத்தோடு கிறிஸ்தவர்களை வெற்றிகொள்வதற்காகவும் தாங்கள் இழந்த பாலஸ்தீனத்தை மீட்டெடுப்பதற்காகவுமே வரவேற்றனர். அதேபோன்று கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை சக்தியாகப் பயன்படுத்தி யூதர்களை வெல்லலாம் எனவும், ஏனைய விக்கிரக வணங்கிகள் முஸ்லிம்களின் பலத்தைப் பயன்படுத்தி தொடர்ந்து வரும் யூதர்களின் அடக்குமுறைகளை அடக்கி வெற்றி பெறலாம் எனவும் பல உள்நோக்கங்களைக் கொண்டு நபி (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் வரவேற்றனர்.

ஆனால், அன்ஸாரிகளோ நபி (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்ற அடிப்படையிலும், மக்கத்து முஸ்லிம்களை தம் கொள்கைச் சகோதரர்கள் எனும் அடிப்படையிலுமே வரவேற்றனர்.

எனவே, மேற்பட்ட எதிர்பார்ப்புக்களைக் கொண்ட மக்களிடம் ஒன்றுபட்ட பலனை எதிர்பார்ப்பது, அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் உடன்பாடொன்று அவசியம் தேவைப்பட்டது. குறிப்பாக உள்நோக்கங்களைக் கொண்டு முஸ்லிம்களை வரவேற்ற மக்கள் தங்களது எதிர்பார்ப்புக்களை அடைய முடியாமல் போகும் போது அரசுக்கெதிராக புரட்சிகளை மேற்கொள்வதை தடுக்குமுகமாகவும் இப்படியான சாசனமொன்று அவசியப்பட்டது.

மதீனா சாசனத்தின் உள்ளடக்கத்தினை கவனத்திற் கொண்டு வரலாற்றாசிரியர்கள் உலகில் தோன்றிய அரசியல் சாசனங்களில் இறைமையுடைய முதன்மையான அரசியல் சாசனம் மதீனா சாசனமேயாகும் என சிலாகித்துக் கூறுகின்றனர்.

மதீனா சாசனத்தில் அரச தலைவரினதும், அவ்வரசின் குடிமக்களினதும் கடமைகள், உரிமைகள் வகுக்கப் பட்டிருந்தன. ஏனைய சமயத்தவர்களின் சமய உரிமைகளும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இவ்வுலகில் காணப்படுகின்ற அரசியல் யாப்புகள் அல்லது சாசனங்களில் குடிமக்களின் கடமைகள், உரிமைகள், சுதந்திரங்கள் சரியான முறையில் வகைப்படுத்தப்படாதபோது மக்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்காக போராட்டங்கள் நடத்துவதைப் பார்க்கிறோம். ஆனால், மதீனா சாசனமானது இந்த நிலையிலிருந்து வேறுபட்டு சமூக நலனையும் அதன் கட்டமைப்பையும் பாதுகாக்கும் வகையில் அமைந்து காணப்பட்டது.

(முற்றும்)